பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

03 09 2026 **THURSDAY** 6.30 PM

**மாநிலச்செய்திகள்**

**தலைப்புச் செய்திகள்**

1) பெரம்பூர் ரயில்பெட்டி தொழிற்சாலை மூலம் 28 குளிர்சாதன புறநகர் ரயில்களுக்கான பெட்டிகள் அடுத்த ஆண்டு முதல் தயாரிக்கப்படும் என்று ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

2) லட்சாதிபதி சகோதரிகள் திட்டத்தில் ஆறு கோடி பேரை இணைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

3) தமிழகத்தில் ஆறு இடங்களில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் திரு விஜய் அறிவித்துள்ளார்.

4) நேபாள பெருவெள்ளத்தில் காணாமல் போனவர்களை அடையாளம் காண்பதற்கு ஏதுவாக, சென்னை, மதுரை, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் DNA பரிசோதனை செய்வதற்கு மாநில அரசு ஏற்பாடு செய்துள்ளது.

5) இந்தோனேஷிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Mansi Singh** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்

- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

ரயில் சேவைகளை விரிவாக்கம் செய்வதற்கான பணிகளை ரயில்வே அமைச்சகம் முனைப்புடன் செயல்படுத்தி வருவதாக

அத்துறைக்கான அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மும்பை **Sindhu Durg** எக்ஸ்பிரஸ் ரயில் சேவையை புதுதில்லியிலிருந்து காணொலி வாயிலாக தொடங்கிவைத்து பேசிய அமைச்சர், ரயில்வே சிக்னல் கட்டமைப்பை நவீன மயமாக்கவும், புறநகர் ரயில்களில் தானியங்கி கதவுடன் கூடிய பெட்டிகளை கொண்டுவரவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

சென்னை பெரம்பூர் ஒருங்கிணைந்த ரயில்பெட்டி தொழிற்சாலை மூலம் **28** குளிர்சாதன புறநகர் ரயில்களுக்கான பெட்டிகள் அடுத்த ஆண்டு முதல் தயாரிக்கப்படும் என்று திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<<<>>>>>>

லட்சாதிபதி சகோதரிகள் திட்டத்தில் ஆறு கோடி பேரை இணைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

மும்பையில் மரக்கன்று நடும் விழாவில் உரையாற்றிய அவர், இதுவரை மூன்றரை கோடி பேர் இந்த திட்டத்தில் இணைந்துள்ளதாக தெரிவித்தார்.

வங்கிக்கடன்கள் பெறுவதற்கு பெண்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்வதாக கூறிய அவர், இதற்கு தீர்வுகாண அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவித்தார்.

சுயஉதவிக்குழுக்களில் உறுப்பினர்களாக உள்ள பெண்கள் தொழில் முனைவோராக மாறி லட்சாதிபதி சகோதரிகளாக உருவெடுத்து வருவதாக திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறினார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் ஆறு இடங்களில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் திரு விஜய் அறிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று தீயணைப்பு மீட்புப்பணிகள், காவல், மதுவிலக்கு ஆயத்தீர்வை துறையின் மானியக் கோரிக்கைகளை தாக்கல் செய்து அறிவிப்புகளை வெளியிட்ட அவர், திண்டுக்கல் — வடமதுரை, சென்னை — போரூர் உள்ளிட்ட ஆறு இடங்களில் 16 கோடி ரூபாய் செலவில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி நிலையங்கள் அமைக்கப்படும் என்று தெரிவித்தார்.

நடப்பாண்டில் ஐந்தாயிரம் பெண் காவலர்கள் உட்பட மொத்தம் 10 ஆயிரம் காவலர்கள் நியமிக்கப்பட உள்ளதாக அவர் தெரிவித்தார்.

தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணிகள் பதக்கம் பொங்கல் தினத்தன்று வழங்கப்படும் என்றும், பதக்கங்களின் எண்ணிக்கை 240-ஆகவும், படித்தொகை 500 ரூபாயாகவும் உயர்த்தப்படும் என்றும் முதலமைச்சர் கூறினார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் உள்ள அரசு ஐ டி ஐ மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் நேரடி மாணவர் சேர்க்கைக்கான கால அவகாசம் வரும் 7-ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் இன்றைய தொழிற்சாலைகளுக்கு தேவையான அனைத்து தொழில் பிரிவுகளிலும் பயிற்சி வழங்கப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழிற்பயிற்சி நிலையங்களில் சேரும் மாணவர்களுக்கு பயிற்சிக்கட்டணம் இல்லை என்றும், கல்வித உதவித்தொகை வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

அரசுப்பள்ளிகளில் பயின்று தொழிற்பயிற்சி நிலையங்களில் சேருபவர்களுக்கு கூடுதலாக ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி மாணவர்கள் தாங்கள் விரும்பும் தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்ந்து பயன்பெறுமாறு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<>>>>>>

நேபாள பெருவெள்ளத்தில் காணாமல் போனவர்களை அடையாளம் காண்பதற்கு ஏதுவாக, சென்னை, மதுரை, தஞ்சாவூர் ஆகிய மண்டலங்களில் உள்ள தடய அறிவியல் ஆய்வகங்களில் **DNA** பரிசோதனை செய்வதற்கு மாநில அரசு ஏற்பாடு செய்துள்ளது.

இதுதொடர்பாக இன்று வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் காணாமல் போனவர்களில் முதல்நிலை உறவினர்களில் விருப்பம் உள்ளவர்கள் இந்த தடய அறிவியல் ஆய்வகங்களில் கட்டணமின்றி **DNA** பரிசோதனை செய்துகொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மையங்களில் உள்ள தடய அறிவியல் துறை இயக்குநர் அல்லது துணை இயக்குநரை நேரடியாக தொடர்புகொண்டு, இந்த வசதியை பெறவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அயலக தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையரகம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

பிரதமரின் அடல் பென்ஷன் திட்டம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று கோவையில் நடைபெற்றது.

கோவை மாவட்ட முன்னோடி வங்கியான கனரா வங்கி சார்பில் நடத்தப்பட்ட இந்த நிகழ்ச்சியில், அடல் ஓய்வூதியத் திட்டத்தில் சேருவது மற்றும் அவற்றின் பயன்கள் குறித்து எடுத்துரைக்கப்பட்டிருப்பதாக வங்கி மேலாளர் திரு கார்த்திகேயன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(Sound Byte — கார்த்திகேயன் - 40 Sec.)*

அடல் பென்ஷன் திட்டம் தங்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது என்று இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்ற பயனாளிகள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

*Sound Byte —பயனாளிகள் (கஸ்தூரி)(வர்ஷினி)- 57 Sec.)*

<<<<<<>>>>>>

சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம், ராணிப்பேட்டை உள்ளிட்ட மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

தமிழகத்தில் நகர்ப்புற பகுதிகளில் உள்ள நியாயவிலைக்கடைகள் மூலம், கிலோ 35 ரூபாய் சலுகை விலையில் வெங்காய விற்பனையை மாநில அமைச்சர்கள் திரு வெங்கடரமணன், திரு காந்தி ராஜன் ஆகியோர் சென்னையில் இன்று தொடங்கிவைத்தனர்.

-----------------

திருவண்ணாமலையில் நிரந்தர ஆதார் சேவை மையத்தை ஆட்சியர் திருமதி வந்தனா கார்க் இன்று திறந்துவைத்தார்.

-----------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் மத்திய — மாநில அரசு திட்டங்களின்கீழ் மானியத்துடன் கூடிய கடனுதவி பெறுவதற்கான சிறப்பு பணிக்குழு நேர்முகத் தேர்வு இன்று நடைபெற்றது.

------------

விழுப்புரம் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் சமரச விழிப்புணர்வு பிரச்சார வாகனம் மற்றும் பேரணியை நீதிபதி திரு மணிமொழி இன்று கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

-----------------

தூத்துக்குடி மாநகராட்சியில் கடந்த 15 ஆண்டுகள் வரை பிறப்புச் சான்றிதழில் பெயர் சேர்க்காதவர்கள் அரசு அறிவித்துள்ள சலுகையை

பயன்படுத்தி வரும் **26** ஆம் தேதிக்குள் பெயரை சேர்த்துக் கொள்ளலாம் என்று மாநகராட்சி ஆணையர் பிரியங்கா தெரிவித்துள்ளார்.

-----------------

வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு பெருநகர சென்னை மாநகராட்சி அம்பத்தூர் மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் வளர்ச்சிப்பணிகளை மத்திய வட்டார துணை ஆணையாளர் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தோனேஷிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Mansi Singh** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், **21-16, 21-13** என்ற செட் கணக்கில், சக நாட்டு வீராங்கனை சந்தோஷ் ராம்ராஜை வென்றார்.

--------------------

**20** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கால்பந்து தகுதிச்சுற்று ஆட்டத்தில் இந்தியா இன்று உஸ்பெகிஸ்தானை எதிர்கொள்கிறது

தாஷ்கண்டில் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

--------------

அல்மாட்டி டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மனுஷ் ஷா, Syndrela Das ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

------------

ஆசிய கோப்பை மகளிர் டுவெண்டி — டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று ஹாங்காங்கை எதிர்கொள்கிறது.

துபாயில் இப்போட்டி இரவு எட்டு மணிக்கு தொடங்குகிறது.

<<<<<<END>>>>>>